N12/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

88122433

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL B – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1**

Thursday 15 November 2012 (afternoon)
Jeudi 15 novembre 2012 (après-midi)
Jueves 15 de noviembre de 2012 (tarde)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for Paper 1.
- Answer the questions in the Question and Answer Booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas ce livret avant d'y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l'Épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la Prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.



© International Baccalaureate Organization 2012

https://xtremepape.rs/

பனுவல் A

# இணைப்பிரியா நண்பர்கள்



❶ இரு நண்பர்களின் உண்மைக் கதை இது. ராஜனும், நஸ்ரு இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஒன்றாகவே பணிபுரிந்தார்கள். ஒருவரை ஒருவர் அன்புடன் ஆதரித்து வந்தார்கள். எந்தவிதமான சுகமோ கஷ்டமோ இருவரும் சமமாகவே அனுபவித்தனர்.

❷ ராஜனுக்கு இப்போது 60 வயது. நஸ்ருவிற்கு வயது 58. இவர்கள் இருவரும் இந்திய மகாசமுத்திரத்தில் உள்ள தீவில் வசிக்கின்றனர். இவர்களின் நெருங்கிய நட்பைக் கண்டு பலரும் அதிசயிக்கின்றனர். ஏனெனில், ராஜன் ஒரு யானை. நஸ்ரு அதன் பாகன்.

❸ அந்தத் தீவில் உள்ள மரம் அறுக்கும் தொழிற்சாலையில் பணி புரிவதற்காக இந்தியாவிலிருந்து வந்த யானைதான் ராஜன். நஸ்ரு அதன் பாகனாக இருந்தார். காட்டிலிருக்கும் பெரும் மரத்துண்டுகளைத் தூக்கிவந்து வாகனத்தில் ஏற்றிட யானை பயன்பட்டது. அதனை இயக்க நஸ்ரு உதவினார். ஆனால், 2002-ஆம் ஆண்டு முதல் இத்தீவில் மரம் வெட்டுதல் தடை செய்யப்பட்டது. மரம் அறுக்கும் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த பல யானைகள் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டன. ஆனால், ராஜனும், நஸ்ருவும் அந்தத் தீவை மிகவும் நேசித்தார்கள். அதனால், இருவரும் அத்தீவிலேயே தங்கிவிட்டார்கள்.

❹ இருபத்தைந்து லட்சம் ரூபாய்க்கு யானையை வாங்க ஒரு கோயில் நிர்வாகம் விருப்பம் தெரிவித்தது. ஆனால், தனது நீண்ட கால நண்பனான ராஜனைப் பிரிய நஸ்ருவுக்கு மனமில்லை. மேலும், ராஜனுக்கு இயற்கைச் சூழலில் சுற்றித் திரிவதற்கும் கடலில் நீந்தி விளையாடுவதற்கும் கொள்ளைப் பிரியம் என்பதை நன்கறிந்தவர் நஸ்ரு. அதனால், கோயிலின் விருப்பத்திற்கு அவர் இணங்கவில்லை.

❺ ராஜன் பல வருடங்கள் கடுமையாக உழைத்துக் களைத்துவிட்டது. இனி அதற்கு நல்ல ஓய்வு தேவை என்பதை உணர்ந்தார் நஸ்ரு. எவ்வாறு அதற்கு உதவுவது என்றெண்ணித் தீவிலிருந்த மக்களின் உதவியை நாடினார். அந்த மக்களும் இருவரிடையே இருக்கும் நெருக்கமான நட்புறவை நன்கு அறிந்தவர்கள். அதனால், பல விதங்களில் பணம் திரட்டி, இருவரும் அத்தீவிலேயே அமைதியாக வாழ ஏற்பாடு செய்தனர்.

❻ இப்போது ராஜனும் நஸ்ருவும் தீவிலேயே தங்கிக் கடலில் நீந்தி மகிழ்ந்து காலம் கழிக்கின்றனர். நஸ்ருவும் ராஜனும் இணைந்திருக்கும் ஒரு புகைப்படம் நேஷனல் ஜியாகிரபியின் அகில உலகப் புகைப்படப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால், இவர்கள் உலக அளவில் பிரபலமானார்கள். மனிதனும் விலங்கும் எவ்வளவு நட்புடன் பழக முடியும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாய் இவர்கள் விளங்குகிறார்கள்.

ஆர். நாராயணசாமி – மஞ்சரி – மாத சஞ்சிகை



https://xtremepape.rs/

பனுவல் B

# அறிஞர் போற்றிய ஒழுக்கம்



❶ நோபல் பரிசுபெற்ற விஞ்ஞானி சர்.சி.வி. ராமன் தம் ஆய்வுக்கூடத்திற்காகச் சில உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்க எண்ணினார். அதற்காக ஒரு நேர்முகத் தேர்வினை ஏற்பாடு செய்தார். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பல இயற்பியல் மேதைகள் ராமனின் ஆய்வுக்கூடத்தில் பணியாற்றும் வாய்ப்பை எண்ணி விண்ணப்பித்திருந்தனர். நேர்முகத் தேர்வும் நடந்தது. சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாய்ப்புக் கிடைக்காதவர்கள் அங்கிருந்து ஏமாற்றத்தோடு திரும்பினர். ஆனால், ஓர் இளைஞர் மட்டும் தேர்வு முடிந்தும் வாசலிலேயே காத்திருந்தார்.

❷ ராமன் அவரை அழைத்து விசாரித்தார். ‘‘ஐயா! நான் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதைப்பற்றிக் கேட்பதற்காக நான் காத்திருக்கவில்லை. நேர்முகத் தேர்வுக்கு வந்துபோவதற்குத் தங்கள் நிறுவனம் பயணத்தொகையை அதிகமாகக் கொடுத்துவிட்டார்கள். கூடுதல் தொகையைத் திருப்பித்தரவே காத்திருக்கிறேன்,’’ என்று அவர் விளக்கமாகக் கூறினார். இதைக் கேட்டு ராமன் நெகிழ்ந்துபோனார். ‘‘உன்னை உதவியாளர் வேலைக்கு நியமிக்கிறேன்! நாளைமுதல் நீ வேலைக்கு வரலாம்,’’ என்று கூறி அந்த இளைஞரை அனுப்பி வைத்தார்.

❸ ராமனின் சக அலுவலர் இதுபற்றி அவரிடம் விசாரித்தபோது, ‘‘அவனுக்கு இயற்பியல் பற்றி அதிகம் தெரியவில்லை என்றாலும் பரவாயில்லை. அதை நான் அவனுக்குக் கற்றுக்கொடுத்துவிடுவேன். ஆனால், அவன் பண்புள்ள மனிதனாக இருக்கிறான். அதுதான் ஒவ்வொரு விஞ்ஞானிக்கும் மிக அவசியமான ஒன்றாகும்,’’ என்று விளக்கமளித்தார்.

❹ தம் வாழ்நாள் முழுதும் உலகமே போற்றுகின்ற விஞ்ஞானியாக மட்டுமல்லாமல், நேர்மையானவராகவும், ஒழுக்கம் நிறைந்த மனிதராகவும் வாழ்ந்தவர் சர்.சி.வி.ராமன். 1921-ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மாநாட்டில் கலந்துகொண்டு கப்பலில் இந்தியா திரும்பியபோதுதான், அவர் மனத்தில் ஓர் அறிவியல் புதிர் தோன்றியது. கடலின் அடர்த்தியான நீல நிறத்தைக் கண்டு, கடல் ஏன் நீல நிறத்தில் இருக்கிறது என்னும் வினாவிற்கு விடை காணத் துடித்தார். இந்த ஆராய்ச்சிதான் அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.

❺ நோபல் பரிசு பெற்றதற்காக அவருக்கு லண்டனில் பாராட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்நிகழ்ச்சியில் மரியாதை நிமித்தமாகக் கொஞ்சம் மது அருந்த விழா ஏற்பாட்டாளர்கள் வற்புறுத்தினர். அதற்கு ராமன், ‘‘நீங்கள் ஆல்கஹாலில் ராமன் விளைவைப் பார்க்க முடியும். ஆனால், இந்த ராமனிடம் ஆல்கஹாலின் விளைவைப் பார்க்கவே முடியாது,’’ என்று பதிலளித்தார்.

எம். நடராஜன் – புதிய பார்வை – நவம்பர் 2009



https://xtremepape.rs/

பனுவல் C

## பழந்தமிழரின் நம்பிக்கைகள்

***[ – X – ]***

பழைமையான எல்லா இனங்களிடத்தும் பல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவற்றுள் பலவும் இன்று வரையில் ஆற்றலோடு வாழ்ந்து வருவது வியப்புக்குரியதாகும். நன்மையின்பால் உள்ள ஆர்வமும் தீமையின்பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகளுக்கு அடிப்படை எனலாம்.

**[ – 15 – ]**

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தனர் நம் முன்னோர்கள். மரம், மலை, நீர்நிலை முதலிய உலகப் பொருள்கள் பலவற்றுள் தெய்வங்களும் பேய்களும் குடியிருப்பதாக எண்ணினர். அவற்றுக்கு வழிபாடு செய்தல், பலியிடுதல் போன்ற சடங்குகளை நிகழ்த்தினர் பழந்தமிழர். இவற்றோடு சொர்க்கம், நரகம், ஊழ்வினை, மறுபிறப்பு என்பனவற்றைத் தொடர்புபடுத்தி நம்பினர்.

**[ – 16 – ]**

தான் செய்யும் செயல் வெற்றியோடு முடிய வேண்டும் எனில் நல்ல நாளிலும், நல்ல வேளையிலும் செய்ய வேண்டும் என்றெண்ணினான் பண்டைக்கால மனிதன். தான் மேற்கொள்ளும் முயற்சிகளில் எதிர்ப்பட்ட சிரமங்களும் இடையூறுகளும் இந்நம்பிக்கையை வலுப்படுத்தின. அக்கால மன்னரிடமும் இந்நம்பிக்கை இருந்துள்ளது. போர் தொடங்குவதற்கு நல்ல நாள் பார்த்தனர். இதற்கென்றே அரண்மனைக் கணியர்கள் இருந்தனர்.

**[ – 17 – ]**

நாள் பார்த்தலோடு சகுனம் பார்த்தலும் இணைந்திருந்தது. சிற்சில பறவை விலங்குகளின் காட்சியும் அவற்றின் குரல்களும் நன்மை தீமைகளை அறிவிக்கும் என நம்பிக்கை கொண்டிருந்தனர் பழங்காலத் தமிழர். பல்லியின் குரலைச் சகுனமாகக் கொள்வது பண்டுதொட்டு இருந்து வரும் மரபு. பல்லி உடம்பின் எப்பகுதியில் விழுந்தால் என்ன பலன் உண்டு என இன்றும் கணித்துக் கூறும் சோதிடர்கள் உள்ளனர். இங்ஙனமே காக்கை கரைவது விருந்தினர் வரவை முன்னறிக்கும் எனவும் நம்பினர். வீரர்கள் போருக்குச் செல்லும்போது சில பறவைகளின் ஒலிகள் சகுனமாகக் கொள்ளப்பட்டன. பறவைகளின் ஒலிகளைக் கொண்டு பலன்களைக் கணித்துக் கூறுபவர்களும் அன்றிருந்தனர்.

**[ – 18 – ]**

ஒரு செயலின் தொடக்கத்தில் பிறர் சொல்லும் சொற்களைச் சகுனமாகக் கொள்வதும் இன்றளவும் தமிழர் பின்பற்றி வருவதை நாம் காணலாம். நல்ல சொற்கள் காதில் விழுந்தால் செய்ய எண்ணும் காரியம் கைகூடும் என்றும் அமங்கலச் சொற்களைக் கேட்க நேர்ந்தால் நினைக்கும் காரியம் சரிவர அமையாது என்றும் பழந்தமிழர் உறுதியாக நம்பினர். இன்றளவும் தமிழர்கள் மங்கல நிகழ்வுகளின்போது இசை எழுப்பி அமங்கல வார்த்தைகள் காதில் விழாதவாறு பார்த்துக்கொள்கின்றனர்.

இவ்வாறு பழந்தமிழர் வாழ்க்கை முறையில் நம்பிக்கைகள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. பலவும் அறிவுக்குப் புலப்படாத மூட நம்பிக்கைகளாகவும் இருந்தன. ஆனால், அவற்றுள் பலவும் இன்றுவரை நிலைத்துள்ளன என்பது வியப்புக்குரியதாகும்.

டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி – தமிழர் நாகரிகமும் பண்பாடும் – செப்டம்பர் 1994



https://xtremepape.rs/

பனுவல் D

# அனைத்துலக விளையாட்டுப் போட்டியால் வந்த சோதனை

❶ 2011-ஆம் ஆண்டு இந்தியா காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை ஏற்று நடத்தியது. அரசாங்கமும் நிகழ்ச்சி ஏற்பட்டாளர்களும் அரும்பாடுபட்டுப் போட்டி நிகழிடமான டெல்லியை உலகத்தரம் வாய்ந்த நகரமாக உருவாக்கினர். போட்டிகளும் வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டன. ஆனால், ஏற்பாட்டில் குறைகள் இல்லாமலில்லை. நிகழ்ச்சி ஏற்பாட்டுத் திட்டங்களுக்காகக் குடிசைவாழ் மக்கள் பலரும் தம் வசிப்பிடங்களிலிருந்து அகற்றப்பட்டார்கள்.



❷ தங்கள் வசிப்பிடங்களையும் வேலைகளையும் இழந்த குடிசைவாழ் மக்கள் தெருவோரங்களிலும் தற்காலிகமான கூடாரங்களிலும் அவலமான வாழ்க்கை வாழ வேண்டியதாயிற்று. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களோ அரசாங்கமோ இவர்களின் மறுவாழ்விற்காக எந்த உதவியும் செய்யவில்லை.

❸ இப்போது விளையாட்டுகள் நடந்து முடிந்துவிட்டன. இந்தக் குடும்பங்களின் வாழ்விடங்கள் இடிக்கப்பட்ட பின்பு கட்டப்பட்ட வாகன நிறுத்தங்களும், நடைமேற்பாதைகளும் இப்போது சரியாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன.

❹ மேலும், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காக அமைக்கப்பட்ட பல விளையாட்டு மேடைகளும், கட்டுமான வசதிகளும் பயன்படுத்தப்படவே இல்லை. இந்த விளையாட்டுப் போட்டிகளைக் காரணம் காட்டியே குடிசைகளும் சேரிகளும் அற்புறப்படுத்தப்பட்டன. ஆனால், சேரிகளற்ற உலகத்தரம் வாய்ந்த நகரமாகத் தில்லியை உருவாக்கும் மறைமுகமான திட்டமே சேரிகள் இடிக்கப்பட்டதற்கு உண்மையான காரணமாகும் எனக் குடிமக்கள் எண்ணுகின்றனர்.

❺ சயீது என்பவர் ஒரு குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொள்ளப் பீகாருக்குச் சென்றிருந்தபோது டில்லியில் உள்ள அவரது சிறிய சிமெண்ட் குடிசை இடிக்கப்பட்டது. அவரது சாதாரண உடைமைகளான படுக்கை, காய்கறிகளை விற்கப் பயன்பட்ட ஒரு சிறு கைவண்டி, வீட்டுப்பொருள்கள் எல்லாவற்றையுமே பறிகொடுத்து, வாழ வழியின்றித் தம் குடும்பத்தைப் பீகாரில் உள்ள கிராமத்துக்கே அனுப்பிவிட்டதாகக் குறைபட்டுக்கொண்டார்.

❻ 62 வயது நிரம்பிய மூதாட்டி தெருவோரத்தில் வியாபாரம் செய்து இறந்துபோன தம் மகனுடைய 11 குழந்தைகளையும் காப்பாற்றி வந்தாராம். ஆனால், காமன்வெல்த் விளையாட்டுகளுக்குப் பிறகு அவரை மீண்டும் தெருவோரத்தில் வியாபாரச் செய்ய அதிகாரிகள் அனுமதிக்காததால் வாழ வழியின்றித் தவிப்பதாகக் கண்ணீரோடு முறையிட்டார்.

❼ இந்தியா காமல்வெல்த் விளையாட்டுகளை ஏற்று நடத்தியதால் ஆதாயம் அடைந்தவர்கள் பலர் இருக்க, தங்களின் சிறு குடிசைகளையும், பிழைப்பையும் இழந்து பரிதவிக்கும் மக்களும் உள்ளனர் என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

டி. எஸ். ஜம்புநாதன் – பாடம் மாத இதழ் – ஏப்ரல் 2011



https://xtremepape.rs/